பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளைநூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

கூடு 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 07 ஞாயிற்றுக்கிழமை (24-09-1995) UTHAYAN A lively National Tamil Daily சுடர் 304

### காங்கேசனில் இரவில் கப்பல்கள் தங்குவதில்லை

# பலாலிக்கான கடல்வழி விநியோகம்

# பெரிதும் பாதிப்புறும் ஆபத்து நிலை!

## டோறா அழிக்கப்பட்டதன் விளைவு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 24

பலாலி இராணுவ முகாமுக்கான கடல்வழி விநியோகம் பெருமளவில் பாதிப்புறும் அபாயநிலை தோன்றியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காங்கேசன்துறையில் கடந்த புதன்கிழமை கடற்படையின் "டோறா" அதிவேக பீரங்கி படகைப் விடுதலைப் புலிகள் தாக்கி அழித்திருந்தார்கள் அல்லவா?

அதன்பின்னர், காங்கேசன்துறை செல்லும் இராணுவ விநியோகக் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு கடற்படையினர் திணறுவதாகவும் அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதன் கிழமையின் பின்னர் காங்கேசன் துறைமுகத்தில் கப்பல் இரவு நேரத்தில் தரித்து நிற்பதில்லை என்றும் — வெற்றிலைக்கேணிக்குச் சென்றே தரிகுவதாகவும் — அறியப்படுகிறது.

கடற்படையின் மிகப்பெரிய விநியோகக் கப்பலான 'எடித்தரா' வை விடுதலைப் புலி

[8 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவில் 3 படையினர் காயம்

கொழும்பு, செப். 24

ஆனையிறவில் விடுதலைப் புலிகளுடன் நேற்று ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் 3 இராணுவத்தினர் காயமடைந்தனர்.

காயமடைந்த இராணுவத்தினர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன. [எ]

## வெள்வத்தையில் திடீர் சோதனை 30 தமிழர் கைது

கொழும்பு, செப். 24

வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள இரண்டு சைவ ஹோட்டல்களில் திடீர் சோதனை நடத்திய பொலிஸார் முப்பதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

அந்த இரு ஹோட்டல்களின் பெயர்ப் பலகை[illegible] பொலிஸாரால் கழற்றப்ப[illegible] பரிசீலிக்கப்பட்டதாக அர[illegible] சார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. [ஐ]

## வெள்ளி மாலை நடந்த குண்டு வீச்சில் ஒருவர் பலி

வடமராட்சி வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் "புக்காரா" விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் சிறுவன் ஒருவர் பலியானார். அவரது குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட எட்டுப் பேர் படுகாயமடைந்தனர்.

பருத்தித்துறை முனையைச் சேர்ந்த சுப்பிரமணியம் உலகநாதன் (வயது. 9) என்ற சிறுவனே உயிரிழந்தார்.

அவரது தந்தையான வேலு சுப்பிரமணியம் [வயது. 45], தாயாரான சுப்பிரமணியம் பத்மமேரி [வயது. 35], சகோதரர்களான சுப்பிரமணியம் சந்திரமோகன் (வயது. 14), சுப்பிரமணியம் மரியசுரேகா [வயது 20] ஆகியோரும் இன்னொரு குடும்பத்தைச் சேர்ந்த சிவராசா சாரதா [வயது. 47) நிக்சன் ஜெயந்தி (வயது. 31], நிரோஜினி (வயது 9) ஆகியோரும் மற்றும்மு. சிவக்கொழுந்து (வயது. 55) ஆகியோரும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்தனர்.

இவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ஐ-173)

# உண்மையைமறைக்கவே அரசு செய்தித் தணிக்கை!

## நாகர்கோவில் தாக்குதல் குறித்து திலகர்

லண்டன், செப். 24

அரச படைகள் நடத்தும் தாக்குதல்கள் குறித்த உண்மை வெளிவரக் கூடாது என்பதற்காகவே பத்திரிகைத் தணிக்கையை ஸ்ரீலங்கா அரசு அமுல்படுத்திவருகிறது. பத்திரிகைத் தணிக்கை அமுலுக்கு வந்த சில மணி நேரங்களில் நாகர்கோவிலில் பாடசாலை ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நாகர் கோவில் பாடசாலை மீது ஸ்ரீலங்கா வான்படைக்குச் சொந்தமான புக்காரா விமானங்கள் நடத்திய தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகளின் சர்வதேச பேச்சாளர் லோறன்ஸ் திலகர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி. தமிழோசை நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஆனந்தி நேற்று லோறன்ஸ் திலகரைப் பேட்டி கண்டார்.

லோறன்ஸ் திலகர் தெரிவித்ததாவது:-

வடமராட்சி கிழக்கில் குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

அப்பொழுது நாகர்கோயில் என்ற இடத்திலுள்ள மகா வித்தியாலயத்தின் மைதானத்தில் இந்த குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது

அங்கு விளையாடிக் கொண்

[8 ஆம் பக்கம் பார்க்க]

### வடமராட்சி பகுதி மீது

# ஷெல் வீச்சு தொடர்கிறது!

## நேற்றும் இருவர் பலி! 6 பேர் காயம்!!

வடமராட்சி, செப். 24

வடமராட்சி பகுதிகள் மீது பலாலி இராணுவ முகாமில் இருந்து படையினர் நடத்தி வரும் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள் நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்தது.

படையினரின் அகோர ஷெல் தாக்குதல்களினால் நேற்று மட்டும் பொது மக்களில் இருவர் பலியாகினர்.

ஆறுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவும் நேற்று பகல் முழுவதும் விட்டு விட்டு ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன.

ஷெல்கள் விழுந்து வெடித்த சத்தங்களால் வடமராட்சி [illegible]

நேற்றுக் காலை [illegible]

[8 ஆம் பக்கம் பா[illegible]

## நேற்றைய ஷெல் வீச்சில் காயமடைந்தோர் விவரம்

வடமராட்சி பகுதி மீது நான்காவது நாளாக நேற்று படையினர் நடத்திய ஷெல் வீச்சில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

- ★ அமலநாதன் ஜேசுதாஸன் [வயது 19] புலோலி கிழக்கு
- ★ மு. செல்வராசா (வயது 60) புலோலி மேற்கு
- ★ சி. அன்னரதி (வயது 26) வியாபாரிமூலை
- ★ க. சந்தசாமி (வயது 45] வியாபாரிமூலை
- ★ சண்முகம் மாலாலட்சுமி [வயது 25] பொன்னண்டி

[8 ஆம் பக்கம் பார்க்க]

### நாகர்கோவில் தாக்குதல் குறித்து

## எம். எஸ். எவ். நிறுவனம் பிரான்ஸில் அறிக்கை

கொழும்பு, செப். 24

நேற்று முன்தினம் வடமராட்சியில் நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது ஸ்ரீலங்கா வான்படையின் புக்காரா விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் ஏற்பட்ட உயிர்ச்சேதங்கள் குறித்து பிரெஞ்சு மருத்துவ நிறுவனமான எம். எஸ். எவ். நிறுவனத்தின் தலைமையகம் பாரிஸில் அறிக்கை வெளியிட்டுள்ளது.

எம். எஸ். எவ். நிறுவனத்தைச் சேர்ந்த பிரெஞ்சு மருத்துவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் கடமை ஆற்றுவது குறிப்பிடத்தக்கது.

வடமராட்சிப் பகுதியில் வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் மொத்தம் 54 பேர் உயிரிழந்துள்ளதாகவும் — உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள் என்றும் —

150 குழந்தைகள் வரை காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் இந்த நிறுவனம் அறிக்கை வெளியிட்டிருப்பதாக பி. பி. ஸி. நேற்றுத் தெரிவித்தது. [இ-4]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் மிலேச்சத்தனமான தாக்குதல்களை சர்வதேச சமூகம் தடுத்து நிறுத்த வேண்டும்

## வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கோருகிறது

யாழ்ப்பாணம், செப். 24

வடமராட்சிப் பகுதி மீது கடந்த சில நாட்களாக அரச படையினர் நடத்திவரும் விமான, ஷெல் தாக்குதல்களை யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 20 ஆம் திகதி முதல் வடமராட்சிப் பகுதிகளில் பரவலாக விமானக் குண்டு வீச்சுக்களும், எறிகணை வீச்சுக்களும் பெருமளவில் நடத்தப்பட்டு வருகின்றன. மிலேச்சத்தனமான — கொடூரமான — இச்செயலை வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

நாகர்கோவில் மகாவித்தியாலயம் வெட்டவெளியில் அமைந்துள்ளது. பாடசாலையின் மேல் வெள்ளைக்கொடி பறக்க விடப்பட்டுள்ளது. பாடசாலை என எளிதில் இனங்காணக் கூடியதாக இருந்தது. அப்படி இருந்தும் பாடசாலையைச் சுற்றி 22 – 9 – 95 அன்று விமானக் குண்டுவீச்சு பலமுறை நடத்தப்பட்டுள்ளன.

பிள்ளைகள் பாதுகாப்புத் தேடி ஓடிய நேரத்தில் வெள்ளைச்சீருடை அணிந்த மாணவர்கள் என அறிந்திருந்தும் அவர்கள் மீது விமானக்குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளது மிகமிகக் கொடூரமான செயலாகும்.

இச்சம்பவத்தில் 18 மாணவர்கள் அவ்விடத்திலேயே உடல் சிதறிப் பலியானார்கள். தங்கள் பிள்ளைகளைக் காப்பாற்ற வந்த பெற்றோர்கள் 12 பேர் எறிகணை வீச்சுக்குப் பலியானார்கள்.

வடமராட்சிப் பகுதியில் பரவலாக நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சு, எறிகணை வீச்சுக்களினால் 40 பேர் பலியாகியுள்ளனர். 180 க்கு மேற்பட்டோர் படுகாயத்துக்குள்ளாகியுள்ளனர்.

திட்டமிட்ட அரக்கத்தனமான இத்தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு, தமிழ் மக்களது வாழ்க்கையில் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட சர்வதேச சமூகம் ஸ்ரீலங்கா அரசு மீது அழுத்தத்தைக் கொடுக்க வேண்டுமென வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கிறது. அத்துடன் இச்சம்பவங்கள் பற்றி ஜனாதிபதிக்கும் வெளிநாட்டு தூதராலயங்களுக்கும் மகஜர் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## பேரணி நடத்துவது பற்றி இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 24

அண்மைக் காலமாக அரசாங்கம் விளைவித்துவரும் அனர்த்தங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்க பேரணி ஒன்றை ஏற்பாடு செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அரச வங்கி நலன்புரிச்சங்கம், ப. நோ. கூ. சங்கங்கள், தென்னை ப' அ. கூ. சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம், வணிகர் கழகங்கள், பாடசாலை அதிபர் சங்கம், செயலக நலன்புரிச் சங்கம், சனசமூக நிலையங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள், வெதுப்பக உரிமையாளர் சங்கம், மத அமைப்புகள், சிற்றூர்தி சேவைச் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், வகுப்புத் தொழிலாளர்சங்கம், இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம், தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்களையும்மற்றும் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## சிறிடி பாபா பிறந்த தினம்

யாழ்ப்பாணம், செப். 24

சிறிடி பாபா பிறந்த தின விழா எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை, திருநெல்வேலி, சேர். பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் அதிகாலை 4–45 முதல் நடைபெறும். (எ)

## இந்து தர்மம் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.24

யாழ். இந்து சமயப் பேரவையின் "இந்து தர்மம்"— மலர் — 10, 11 சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று ஞாயிறு மாலை6–30மணிக்கு கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடிப் பிள்ளையார் கோயிலில் நடைபெறும்.

முதற் பிரதியை வைத்திய கலாநிதி ச. குகதாசன் பெற்றுக்கொள்வார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. அ. வைத்திலிங்கம் வெளியீட்டுரையும், திரு. ஆறுதிருமுருகன் சிறப்புரையும், நிகழ்த்துவார்கள் நல்லை திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். (ஒ)

## வடமராட்சி கிராம சேவையாளருக்கு

வடமராட்சி, செப். 24

வடமராட்சி பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்று வரும் விமான மற்றும் ஷெல் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் விவரங்களைத் திரட்ட வசதியாக—

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம சேவையாளர்களை மந்திகை கிராம சேவையாளர் அலுவலகத்திலும் —

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி தென். மேற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவையாளர்களை கரவெட்டி பிரதேச செயலகத்திலும் இன்று காலை 7 மணியளவில் ஒன்று கூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)


ஹரி ஓம் ஸ்ரீராம ஜெயம்

யாழ். கோண்டாவில் கிழக்கில்

எழுந்தருளியிருக்கும்

அருள்மிகு

ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானம்

( நாராயணன் )

வருடாந்த மகோற்சவ

விஞ்ஞாபனம்

கொடியேற்றம்
25 — 9 — 95 திங்கள் பகல் 10-00மணி

பன்னிரு ஆழ்வார் உற்சவம்
30 — 9 — 95 பகல் 10-00 மணி

வேட்டைத்திருவிழா
1 — 10 — 95 பி. ப. 2-00 மணி

அனந்தசயன உற்ஷவம்
2 — 10 — 95 பகல் 10-00 மணி

சப்பறம்
2 — 10 — 95 மாலை 5-00 மணி

தேரோற்ஷவம்
3 — 10 — 95 பகல் 10-00 மணி

தீர்த்தோற்ஷவம்
4 — 10 — ϛ5 பகல் 10-00 மணி

கொடியிறக்கம்
4 — 10 — 95 பி. ப. 4 00 மணி

திருக்கல்யாணம்
5 — 10 — 95 மாலை 4-00 மணி

ஆஞ்சனேயர் பொங்கல்
6 — 10 — 95 மாலை 8-00 மணி

இங்ஙனம்:
ஆலய பரிபாலன சபையும்,
உபயகாரர்களும்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

விளம்பர அன்பளிப்பு;
ஹரன் நோவு முறிவு வைத்திய அகம்
மு. பூபாலசிங்கம் (வைத்தியர்)
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
[38659]


# புலிகளை தடை செய்யும் நோக்கத்தை கைவிடும் நிலையில் இலங்கை அரசு

## "ராய்ட்டர்" செய்தி நிறுவனம் தகவல்

கொழும்பு செப். 24

விடுதலைப் புலிகளைத் தடைசெய்வது என்ற தனது அண்மைக் காலத் திட்டத்தை அரசு கைவிட வேண்டிய நிலையில் இருப்பதாகத் தோன்றுகிறது.

விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வெளிநாட்டு அரசுகள் காட்டும் தயக்கமே இதற்கும் காரணம் எனத் தெரியவருகிறது.

"ராய்ட்டர்" செய்தி நிறுவனம் இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

அமெரிக்காவின் உதவி வெளிநாட்டு அமைச்சர் ரொபின் ராபேல் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த போது புலிகளைத் தடைசெய்ய அமெரிக்கா தயாராக இல்லை என்பதை வலுவாகக் கோடி காட்டியிருந்தார். இதனால் புலிகளைத் தடைசெய்ய ஏனைய நாடுகள் முன்வருமா என்பதில் அரசு தெளிவற்று இருக்கிறது.

விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் செயலானது புலிகளுக்கான சமாதானக் கதவுகளை முற்றாகவே அடைத்து விடும் என அதிகாரிகள் கருதுகின்றனர்.

அது மட்டுமன்றி சமாதானத்தை அடையும் பணியில் அரசை ஒரு தர்மசங்கடமான நிலைமைக்கு அது இட்டுச் சென்றுவிடும்.

அமெரிக்க அரசின் கருத்துப்படி புலிகள் அமெரிக்கச் சட்டங்களை மீறினால் மட்டுமே அவர்களைத் தடை செய்ய முடியும்.

எவ்வளவு உக்கிரமான போரில் அரச படைகள் தற்போது ஈடுபட்டு வந்தாலும் என்றாவது ஒரு நாள் விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டியிருக்கும் என்பதை அரசு நன்கு அறியும் எனவும் அரச அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை முன்னெடுத்துச் செல்ல எதுவித தடையும் இருக்கக்கூடாது என்று இராணுவம்விரும்புகிறது. ஆனால் யுத்தத்தின் மூலம் இராணுவம் அடைய இருப்பது என்ன என்பது இன்னமும் குழப்பமாகவே உள்ளது.

— இவ்வாறு 'ராய்ட்டர்' தெரிவித்துள்ளது. (ஐ)

# அடுத்த பத்து ஆண்டுகால அரசியலில் புலிகளே ஆதிக்கம் செலுத்துவார்கள்

## ஐ.தே.க எம்.பி கூறுகிறார்

கொழும்பு, செப். 24

இலங்கை அரசியலில் அடுத்த 10 ஆண்டுகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே இராணுவ ரீதியாக ஆதிக்கம் செலுத்துவர். எனவே அரசாங்கம் அவர்களுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

— இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐ.தே.க எம்.பியான பேராசிரியர் கருணாசேன [illegible] [illegible] லீக் [illegible] முன்னணிகள் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு ஒன்றில் "இன்றைய அரசியல் சூழ்நிலை" என்ற தலைப்பில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பில் உள்ள தமிழ் தலைவர்களுடன் பேசுவதன் மூலம் வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வடக்கு, கிழக்கில் தனது சட்டங்களைப் பிரபாகரன் செயற்படுத்துகிறார்.

கடந்த ஐந்து வருடகாலத்தில் யார் இலங்கையின் அரசியல் வாதியாக இருக்க வேண்டும் என்பதை அவர்களே தீர்மானித்தார்கள்.

யுத்தத்தினால் விடுதலைப் புலிகளை ஓரளவு கட்டுப்படுத்தலாம். அல்லது பலவீனமடையச் செய்யலாம். ஆனால் கடைசி சந்தர்ப்பங்களில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக அவர்களுடன் பேச்சு நடத்த வேண்டி இருக்கும். — என்றார்.

(ஐ)


G. C. C. வைத்திய நிபுணர்கள்

ஆலோசனை நிலையம்

514/14, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

(E. N. T) காது, மூக்கு, தொண்டை, சிறுபிள்ளைக்குரிய வைத்தியம் மகப்பேறு, சரும நோய்கள், பல்கட்டுதல், பல் வைத்தியமும், வைத்திய நிபுணர்களின் ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகின்றன.

நிர்வாகி

(38661)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ஒள நூலகம்.

# நிவாரணப் பொருள்கள் எடுத்துவரும் 'லங்கா கல்யாணி'யின் பணி தொடரும்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். மாவட்டத்துக்கான நிவாரணப் பொருள்களை எடுத்துவரும் பணியில் 'லங்கா கல்யாணி' கப்பல் தொடர்ந்து சேவையில் ஈடுபடவிருப்பதாக செயலகம் தெரிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்களை எடுத்துவரும் பணிக்காக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இக்கப்பலை மீளப் பெறுவதற்கு சிங்கப்பூர் கப்பல் கம்பனி முயற்சி எடுத்திருந்தது.

இக்கப்பலைப் பெற்றிருந்த ஸ்ரீலங்கா கப்பல் கூட்டுத்தாபன பிரதிநிதிகளுக்கும், சிங்கப்பூர் கம்பனி அதிகாரிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களையடுத்து —

ஸ்ரீலங்காவில் இக்கப்பல் தொடர்ந்து சேவையாற்ற இணக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து - வடக்கே பொருள் ஏற்றிவரும் பணியை இக்கப்பல் மீள ஆரம்பித்துள்ளதாகவும் —

தற்சமயம் கப்பலில் பொருள்கள் ஏற்றும் பணி நடப்பதாகவும் —

அடுத்த வாரம் இக்கப்பல் பருத்தித்துறைக்கு வரும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

[இ-3]

## உற்பத்தி ஊக்குவிப்பு கடன்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுவினர் அண்மையில் வலிகாமம் கிழக்கு, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் உள்ள 21 குடும்பங்களுக்கு கைத்தொழில் ஊக்குவிப்பு கடன்களை வழங்கியுள்ளனர்.

ஆடுவளர்ப்பு மற்றும் நீர் இறைக்கும் இயந்திரக் கொள்வனவு போன்றவற்றிற்கான கடன்களையும் கிராமிய உற்பத்திக் குழுவினர் வழங்கி வருவதால் கிராமப்புற மக்கள் பெரிதும் பயனடைந்து வருவதாகவும் தெரிய வருகிறது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கிராமிய நிதியங்களின் ஊடாக கைத்தொழில் மற்றும் விவசாய ஊக்குவிப்பு கடன்களை வழங்கி வருவது தெரிந்ததே.

(ஓ

## இலவச தையல் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, செப். 24

தமிழர் புனர்வாழ்வுக் கழக தென்மராட்சிப் பிரிவினர், இப் பகுதியில் உள்ள உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி வகுப்புக்களை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்தத் தையல் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும் உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் சாவகச்சேரி, தனன்கிளப்பு வீதியில் உள்ள தையல் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

(எ-117)

## மாமுனையில் தபால் பெட்டி இடையாது

செம்பியன்பற்று, செப் 24

நாகர்கோவில் மாமுனைக் குடியிருப்புப் பகுதியில் தபால் கந்தோர் தபால் பெட்டி நிறுவப்படவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் இரண்டு மைல் தூரம் சென்று தமது தபால்களைப் போடும் நிலையில் உள்ளனர்.

(க-ரி)

# யுத்தத் தோல்விகளை மறைக்கவே தணிக்கை!

வடக்கு - கிழக்கு யுத்த முனைகளில் அரசுக்கு ஏற்பட்டு வரும் தோல்விகளை ஸ்ரீலங்கா அளவிலும் சர்வதேச மட்டத்திலும் மறைப்பதற்காகவே செய்தி தணிக்கை முறையை அரசு கொண்டு வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

காங்கேசன் கடலில் டோறா படகு தகர்க்கப்பட்ட செய்தியும் இத்தணிக்கை முறையின் மூலம் தெற்கில் ஒழிக்கப்பட்டு விடுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் டோறா படகின் கட்டளையிடும் அதிகாரி லெப்டினன்ட் அமரசேகராவும் இன்னொரு கடற்படைச் சிப்பாயும் கொல்லப்பட்டனர் என்று மட்டுமே அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது.

வடபகுதி மீது பெரும் இராணுவத் தாக்குதலுக்கு அரசு தயாராகி வருவதாகக் கூறப்படும் இவ்வேளையில் செய்தித்தணிக்கை அமுலுக்கு வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-3 6)

## பத்திரிகையாளர்களுக்கு தணிக்கை குறித்து விளக்கம்

கொழும்பு, செப். 24

யுத்தமுனைச் செய்திகளை வெளியிடுவதற்கு அரசு விதித்துள்ள செய்தித் தணிக்கை முறை குறித்து பத்திரிகையாளர்களுக்கு நேற்று முன்தினம் விளக்கமளிக்கப்பட்டது.

இதற்காக உள்நாட்டுவெளிநாட்டு பத்திரிகையாளர்கள் தகவல் துறை அமைச்சுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

தடை செய்யப்பட்ட செய்திகள் குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க விளக்கமளித்தார்.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள செய்தித் தணிக்கை முறை குறித்து பத்திரிகையாளர்கள் பல வினாக்களைத் தொடுத்தனர்.

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சில பகுதிகளிலேயே அவசரகாலச் சட்டம் தற்போது அமுலில் உள்ளது. அப்படியானால் அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாத ஓர் இடத்தில் இருந்து வழங்கப்படும் செய்திகளை வெளியிட அனுமதி உண்டா என்றும் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

தகுதி வாய்ந்த அதிகாரியான தொடர்பு சாதனத் துறை அமைச்சின் செயலாளர் எட்மன் ஜெயசிங்க வினால் அந்தக் கேள்விக்கு பதிலளிக்க முடியாது போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

செய்தித் தணிக்கையை மீறுவோர் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து அவர் விளக்கம் எதனையும் அளிக்கவில்லை.

[ஐ 6]

# செவ்வாயன்று விஜயதசமி; அன்று ஏடு தொடக்கலாமா?

இந்துசமய கலாசாரத்திற்கமைய பல சுபகருமங்களை நாம் பஞ்சாங்கங்களின் உதவி கொண்டு செய்துவருகின்றோம். இவற்றில் பல, திதி, வாரம், மாதம் பார்த்துச் செய்து வருவது வழக்கமாகும். புரட்டாதி மாதமும் செவ்வாய்க்கிழமையும் சுபகருமங்களுக்கு விதிவிலக்காகக் கருதப்படுகின்றன.

★ விஜயதசமி நாளில் அக்ஷராரம்பம், வித்தியாரம்பம் (ஏடு தொடக்குதல்) ஆகியன நம் முன்னோராக் செய்யப்பட்டு வருகின்றன. இவ் வருடம் விஜயதசமி 3—10—1995 செவ்வாய்க்கிழமை வருகிறது. இப்படியான ஒரு சிறந்த கருமத்தை நாம் புரட்டாதி மாதத்தில் செவ்வாய்க்கிழமையில் செய்யலாமா?

★ பஞ்சாங்கங்களில் அக்ஷராரம்பம், வித்தியாரம்பம் முதலியன செய்வதற்கெனத் தனியாகப் பதித்திருக்கிறார்கள் அவ்விடத்தில் புரட்டாதி மாதம் தவிர்க்கப்பட்டுள்ளது அப்படியிருக்கையில் அக்ஷராரம்பம், வித்தியாரம்பம் முதலியவற்றை இந்நாளில் செய்யலாமா?

★ விரதம் வேறு முகூர்த்தம் வேறு என்று கொண்டாலும், விஜயதசமி கல்வித் தெய்வத்திற்குரிய நாளாக நாம் கருதுவதால் அந்நாளில் இவற்றைச் செய்வது வழக்கமாகியுள்ளதாகக் கருதலாம் இதே வேளை விஜயதசமி நாளில் ஏற்கெனவே கல்வி கற்போர் மட்டும், இந்நாளில் இவற்றைச் செய்வது தான் வழக்கமாக இருக்குமோ எனச் சந்தேகமாக உள்ளது.

★ பஞ்சாங்கங்களில் அக்ஷராரம்பம், வித்தியாரம்பம் எனப் பதிக்கப்பட்ட நாளில்தான் செய்ய வேண்டுமா, விஜயதசமி நாள் எந்த நாளாயினும் செய்யலாமா?

இச் சந்தேகத்தை நிவர்த்தி செய்தால் தமது பிள்ளைகளை கல்வியில் கால் பதிக்க வைக்க உள்ள பெற்றோருக்கும் பேருதவியாக இருக்கும்.

— பேரின்பநாயகம் மயூரன்

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

## லயன்ஸ் கழக உதவியுடன் 346 பேர் கண் சோதனை

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஜூலை மாதத்தின் பின்னர் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கண் வைத்திய நிபுணர்களான டாக்டர்கள் எஸ் குகதாசன், செல்வி எஸ். சரவணமுத்து ஆகியோரின் உதவியுடன் சுமார் 346 பேருக்கு கண் பரிசோதனை செய்துள்ளது.

அத்துடன் பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்திலுள்ள பளை அரசினர் வைத்தியசாலையில் சுமார் 345 பேர் கண் பரிசோதனைக்குள்ளானார்கள் இவர்களுள் பார்வை குன்றிய 65 பேருக்கு — மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன் மேலும் 14 பேருக்கு மருந்தும் வழங்கப்பட்டது.

இதேவேளை லயன்ஸ்கழக உறுப்பினர்களான டாக்டர்கள் ரி. சிவபாதம், எஸ் அருளானந்தம், எஸ். தம்பித்துரை, பே பிலிப்ஸ் ஆகியோரினால் பொது மக்களுக்கு நீரிழிவுவியாதி, இரத்த அழுத்தம் ஆகிய பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. இந் நடவடிக்கையில் ஜூலை மாதத்தின் பின்னர் [illegible] பேருக்கு, இரத்த அழுத்த பரிசோதனையும், 173 பேருக்கு நீரிழிவு வியாதிப் பரிசோதனையும் செய்யப்பட்டன.

மேலும் இம்மாதத்தில் 117 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஓ-31)

# பௌத்த மதத் தலைவர்களுக்கு தீர்வுயோசனை அனுப்பப்பட்டது ஏன்?

## பிரதி அமைச்சர் விளக்கம்

கொழும்பு, செப். 24

இலங்கை ஒரு பௌத்த மத நாடு. பண்டைக் காலம் தொடக்கம் பௌத்த மதத் தலைவர்களே இந் நாட்டு ஆட்சியாளர்களின் வழிகாட்டிகளாக இருந்துள்ளனர். இதனை நன்கு உணர்ந்தே அரசியல் தீர்வு யோசனைகளை பௌத்த மதத் தலைவர்களுக்கு அரசு அனுப்பியுள்ளது.

— இவ்வாறு மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், புத்த சாசன பிரதி அமைச்சருமான திருமதி சுமேதா ஜயசேன தெரிவித்தார்.

அண்மையில் குவான்வலையில் ஸ்ரீ ராஜசிங்க விகாரையில் நடைபெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டின் வழிகாட்டிகளாக விளங்குபவர்கள் பௌத்த மதத் தலைவர்களே.

இதனால் அவர்கள் நாட்டையும், மக்களையும் காப்பாற்றும் தேவதைகளாகவே கணிக்கப்படுகின்றனர். இதனை எமது அரசும் நன்கு உணர்ந்துள்ளது.

அதனாலேயே அரசியல் தீர்வு யோசனைகளையும் அரசு பௌத்த மதத் தலைவர்களுக்கு அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த ஒரு முடிவிலும் பௌத்த மதத் தலைவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்படும்.

— இவ்வாறு அவர் தெரிவித்தார்.

[ஓ-எ]

## நியாய விலையில் சவர்க்காரம்

வர்த்தகத் திணைக்களத்தின் சாவகச்சேரி மக்கள் கடையில், கடந்த 21 ஆம் திகதி முதல் சன்லைட் சவர்க்காரம் ஒன்று பத்து ரூபா வீதம் விற்பனை செய்யப்படுகிறது.

ஒருவருக்கு ஒரு சன்லைட் கட்டி வீதமே வழங்கப்பட்ட போதிலும் அதனைப் பெற மக்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

(எ-117)

# விளையாடிக் கொண்டு நின்ற மாணவர்களை சிலநொடிகளில் பிணக்குவியலாகக் கண்டேன்

## நேரில் கண்டவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

பாடசாலைக்கு அருகில் மர நிழலில் விளையாடிக் கொண்டிருந்த மாணவர்களை சில நொடிகளில் பிணக்குவியலாகக் கண்டேன்.

நாகர்கோவில் மகாவித்தியாலய சூழலில் வெள்ளியன்று இடம்பெற்ற புக்காரா அனர்த்தத்தை நேரில் கண்ட இளைஞர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாகர்கோவில் பகுதியில் கடற்தொழில் செய்து வரும் சிதம்பரப்பிள்ளை சசிகரன் என்ற அந்த இளைஞர் தாம் நேரில் கண்ட அவலத்தை உதயன் செய்தியாளர்களிடம் விவரித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

நண்பகல் 12.30 மணி இருக்கும். இடைவேளையில் வீடுகளுக்குச் சென்ற சில மாணவர்கள் பாடசாலைக்கு திரும்பிக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு திரும்பிய மாணவர்கள் பாடசாலைக்கு அருகே உள்ள மரங்கள் நிறைந்த பகுதியில் விளையாடிக் கொண்டு நிற்பது வழக்கம்.

பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் அப்பகுதியில் விளையாடிக் கொண்டு நின்றதை நான் கண்டேன்.

அச்சமயம் வானில் பிரவேசித்த இரு புக்காரா விமானங்கள் அப்பகுதியை பல முறை சுற்றி வட்ட மடித்தன. சற்று நேரத்துக்கெல்லாம் அவை பாடசாலை பகுதி மீது திடீர் திடீரென ரொக்கட்டுக்களை வீசின. அவை பெரும் சத்தத்துடன் வெடித்தன அதனைத் தொடர்ந்து புகைமண்டலம் எழுந்தது.

மூன்று நான்கு ரொக்கட்டுகளை வீசிய பின் விமானங்கள் அப்பகுதியை விட்டு [illegible] மாக நின்ற நான் [illegible] சாலையை நோக்கி ஓடி[illegible].

அப் பகுதியில் மர நிழலில் விளையாடிக் கொண்டிருந்த மாணவர்கள் அனைவருமே இரத்த வெள்ளத்தில் சதைத் துண்டங்களாகச் சிதறிக் கிடப்பதைக் கண்டேன்.

எங்கும் முனகல் ஒலியும் மரணஓலமும் கேட்டன; பிணவாடை வீசியது. சாம்பல் நிறமான புழுதி அப் பகுதியை நிறைத்திருந்தது.

அங்கு நின்ற மாணவர்களில் எவருமே எஞ்சவில்லை.

சதைத்துண்டங்களை சாக்குகளில் போட்டு லொறியில் ஏற்றினோம்.

எமது கண் முன்னாலேயே பல சிறுவர்கள் துடிதுடித்து உயிர் விட்டனர். — என்றார்.

[ஐ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பிறாமா, சிக்கி, பன்டம், பாமாஸ் (கறுப்பு, வெள்ளை), வெள்ளடிய, தாரா, கோழிகள், குஞ்சுகள், பொமேரியன் நாய்க்குட்டிகள் (ஒரு மாதம் நிரம்பிய பூச்சி அகற்றிய, பல நிறத்திலும்), ரயருடன் கூடிய வண்டில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 6, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை. [சி-2341]

அடை வைக்கக்கூடிய நல்லினக் கோழி முட்டைகள் மற்றும் இதரை வாழைக்குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். [38654]

3'x5' இறிக்கேற், 2'x5' தகரக்கேற், பூச்சாடிகள், முயல்குட்டிகள், சணல் ஆடு (பால் கறக்கும் நிலையில்) விற்பனைக்குண்டு. தொடர்பு இல. 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [38642]

### ஆடு விற்பனைக்கு

எட்டு மாத சணல் கடாக் குட்டியும், மறிக்குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: சி. சண்முகலிங்கம் பாபு, சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடி, விநாயகர் வீதி, கல்லியங்காடு சந்தைக்கு அருகில். [38648]

### காணி விற்பனைக்கு

செம்மணி வீதி, கொடுக்காயடி ஒழுங்கையில் 72/7 இலக்க ..., வான்பயிர். செய்கை உட்பட $4\frac{1}{2}$, பரப்பு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வீ. பழனித்துரை, 24, குமார வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [தினம் மாலை 5-30 மணிக்குப் பின் சந்திக்கலாம்] [38656]

### மணமகன் தேவை

வசதியான குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய குற்றமற்ற அழகிய பட்டதாரி மணமகளுக்கு பட்டதாரி, கணக்காளர், டாக்டர், எஞ்சினியர், சட்டத்தரணி விரும்பத்தக்கது. தொடர்பு: வி. இல. 850, மே/பா உதயன். (38623)

### மணமகள் தேவை

நற்குணமுடைய 32 வயதுள்ள பெரிய உத்தியோகத்திலுள்ள B. Sc. மணமகனுக்கு படித்த நிறமான அழகான நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. தொடர்பு: விள. இல. 849, C/o உதயன். (38641)

### புலமைப் பரிசில் பரீட்சை

புதிய பாடத்திட்டத்திற்குரிய வழிகாட்டி "பொது விவேகம்" 97/-. வினாத்தாள்கள் I, IIற்குரியது. வெளியீடு: அகிரன் பதிப்பகம். எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 18% கழிவுடன் மொத்தமாகப் பெற யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். [சி-2211]

### தென்னம் நாற்றுகள்

உடன் நடுகைக்குகந்த நல்லரக தென்னம் நாற்றுகள் சாதாரணம் செவ்விளனி, வத்தாவி இனங்கள் விற்பனைக்குண்டு. மு. காமேசு ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. [38646]

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் சகல வசதிகளும் கொண்ட கடை வாடகைக்கு உண்டு. மருந்தகத்திற்கு உகந்தது. தொடர்பு கொள்ளவும்: இல. 9, செட்டித்தெரு லேன், நல்லூர், யாழ்ப்பாணம். (38627)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து ஆங்கிலம் ஆண்டு நான்கிலிருந்து O/Lஇற்கு அப்பாலும் ஆரம்ப அறிவிலிருந்து சரந்த அறிவைப் பெறுவதற்கும் கற்பிக்கப்படும். உங்கள் விலாசங்கள் மாத்திரம் அறிவித்தால் உடன் நேரில் தொடர்பு கொள்ளப்படும். தொடர்பு: இல. 977. மே/பா உதயன். [8747]

ஆரம்பம்!...

**SPOKEN ENGLISH GRAMMAR CLASSES**
By
**BRITTO**

28 – 09 – 1995
காலை 8.00 மணி

ஈசன்
**கல்வி நிலையம்**
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(38644)

## பிரத்தியேக வகுப்பு

## A\L 97

வணிகப் புள்ளிவிபரவியல்

க. இராஜேந்திரகுமார் B. Sc.

ஆரம்பம்:
**30-09-95**

பிரிவு I
★ சனி — ஞாயிறு 3-4

பிரிவு II
★ திங்கள் — வெள்ளி 4-5

முன் கூட்டியே அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி/2332)

## தேவை
### விஞ்ஞான ஆசிரியர்

6ஆம், 7ஆம், 8ஆம் ஆண்டுகளுக்கு விஞ்ஞானம் கற்பிப்பதற்கு அனுபவமுள்ள ஆசிரியர்கள் தேவை. 28-09.95இற்கு முன் நேரில் வரவும்.

**BOND கல்வி நிறுவனம்**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(8750)

## A/L PHYSICS

திரு. ரவீந்திரநாதன் B. Sc. (Cey.) Dip-in-Ed.

ஆரம்பம்:- **24- 09 - 1995**

**BOND** கல்வி நிறுவனம்
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(8749)

# 'புளொக்' தேவையா? வாருங்கள்...!

- ✶ உங்கள் குழந்தைகளின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.
- ✶ உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவஞ்சலிகள்
- ✶ வர்த்தக விளம்பரங்கள்

இவற்றை "புளொக்"குகளுடன் விளம்பரம் செய்தால் கவர்ச்சிகரமாக இருக்குமல்லவா?

தரம் வாய்ந்த "புளொக்"குகளைச் செய்வதற்கு நீங்கள் அலைய வேண்டியதில்லை. அந்தப் பொறுப்பை எங்களிடம் விட்டு விடுங்கள்.

உங்கள் சொந்தத் தேவைக்குரிய "புளொக்"குகளையும் செய்து தருவோம்.

உதயன் விளம்பரத்துக்கெனச் செய்யப்படும் "புளொக்"குகளின் கட்டணங்கள்:

| | | |
|---|---|---|
| பாஸ்போட் | – | ரூ 200/- |
| 9 X 6 c. m. | – | ரூ 365/- |
| போஸ்காா்ட் | – | ரூ 450/- |

முழு விவரங்களையும் அறிவதற்கு உதயன் அலுவலக கருமபீடத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**உதயன்**
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## பொருளியற் கல்லூரி

110/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

## A\L 96 DAY CLASS

(பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு)

### முழுப்பாடத் திட்ட வகுப்பு

| | |
|---|---|
| பொருளியல் | — வரதராஜன் |
| கணக்கியல் | — சௌந்தி |
| வர்த்தகம் | — வரதன், சிவா |
| அளவையியல் | — சர்மா |
| இந்துநாகரீகம், இந்துசமயம் | — காரை, கெங்கா |
| தமிழ் | — திருமதி. மீரா |
| புவியியல் | — சண் |
| கிறிஸ்தவம் | — நிரஞ்சன் |

ஆரம்பம்: 25 – 09 – 1995
திங்கள் 8-00 a. m.
(சி-2299)



UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**POSTGRADUATE DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING/ DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING**

**REPEAT EXAMINATION 1995**

Applications are called for the above repeat examination. The candidates are requested to obtain the forms from the Exams&Admissions Branch and submit the completed forms on or before 1995-10-28 with the necessary payment receipt.

Registrar

(6...6)

# BECON
யாழ்ப்பாணம்

# A/L - 96

கலை, வர்த்தகம்

## DAY CLASS

(பாடசாலை செல்லாத மாணவர்களுக்குரியது)

ஆரம்பம்: **29 - 09 - 1995**
காலை 8-00 மணி

★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
(...2322)

### 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 | 04 |
| — | — |
| 08 | 10 |
| — | — |
| 1979 | 1994 |

செல்வன்
**நாகராஜா சிவசங்கர்**

சிவா சிவா என்று நாம் சிந்திக்கின்ற வேளையில்
சிவமே என நீயும் சிவகதி அடைந்தாயோ?
சங்கரா சிவ சங்கரா என்று நாமும்
சதா கதறுகின்ற வேளையில்
சங்கரன் தான் சென்றனையோ

— குடும்பத்தினர்,

87, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(38643)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் நடத்தும்

# முதறிஞர் நம. சிவப்பிரகாசம் நினைவுப் பிரார்த்தனை விழா மலர்

(ஞாயிறு - 24 - 09 - 1995)

## நாவலர் மரபைப் பேணி நல்லறிஞராக திகழ்ந்தவர்

இருபதாம் நூற்றாண்டிலே ஆறுமுக நாவலரின் மரபைப்பேணி அதன்வழி ஒழுகிய நல்லறிஞராகத் திகழ்ந்தவர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள்.

எமது பாலர் ஞானோதயசபை 1946ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து அச்சபையின் பேராதரவாளராக விளங்கி வந்தார். சபையின் முதலாவது ஆண்டுவிழா முதல் நாற்பதாவது ஆண்டுவிழா வரை ஒவ்வொரு விழாவிலும் பங்குகொண்டு அறிவுரைகள் நல்கியும் பரிசில்கள் வழங்கியும் சிறப்பித்தார். சபையின் வெளியீடுகளுக்கு ஆசியுரைகள், முகவுரைகள் வழங்கிக் கௌரவித்தார்.

இவரது சேவை என்றும் எவராலும் மறக்க முடியாதது. இப்பெரியாரின் ஆத்மா சாந்தியடையக் காசி ஐங்கரனைப் பிரார்த்திப்போமாக.

சிவஸ்ரீ. சி. கணேசலிங்கக் குருக்கள்
பாலர் ஞானோதயசபை,
காசிவிநாயகர் தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## ஆயிரம் பிறை கண்ட அனுபவ ஞானி

ஈழத்தின் தலைசிறந்த கல்விமான்களி லொருவரும் சைவத்தமிழ் எழுத்தாளரும், சட்ட வல்லுநரும், கவிஞருமான சைவப் பெரியார் ஆர். என். சிவப்பிரகாசம் அவர்களின் மறைவு ஈழம் வாழ் இந்துக்களுக்கு பேரிழப்பாகும். அன்னாரது மறைவையொட்டி துர்க்கை அம்பாள் தேவஸ்தானம் வெளியிடவுள்ள சிறப்பு மலருக்கு செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

இளமைக் காலம் தொட்டு இற்றைவரை இவராற்றிய சமய சமூகப் பணிகள் அளப்பரியன. இந்துசாதனம் பத்திரிகை ஆசிரியராக இருந்து இவர் தீட்டிய ஆசிரியர் தலையங்கங்களும், கட்டுரைகளும், கவிதைகளும் ஆன்றோர் உள்ளங்களில் ஆவப்பதிந்தவை.

தேவஸ்தான பரிபாலன சபைத்தலைவர் மதிப்பார்ந்த அம்மையார் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்குப் பக்க பலமாகத் திகழ்ந்தவர். ஆயிரம் பிறைகண்ட அனுபவஞானி. சிவபூஜா நியமம் வழுவாது சைவானுஷ்டானங்களை வாழ்நாள் முழுவதும் பேணிவந்த சிவபூஜாதுரந்தரர்.

இத்தகைய சிறப்புப் பல நிறைந்த பெரியாருக்கு இந்துக்கள் சார்பில் சிரம் தாழ்ந்த அஞ்சலிகளைச் செலுத்துவதோடு அவர் ஆத்மா என்றும் ஆடல்வல்லான் பாதங்களின் கீழிருந்து இன்புற வாழ்த்தி வணங்குவோம்.

சி. சக்திகிரீவன்
(கௌரவ செயலாளர்,
இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்)

## நினைவை விட்டகலா சைவப் பெருமகனார்


"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" இக் குறளுக்கு அமைய வாழ்ந்து காட்டிய பெருந்தகையான மூதறிஞர், எங்கள் அன்புக்குரிய போஷகர் சைவப் பெரியார் நம. சிவப்பிரகாசம் ஐயா அவர்கள் இன்று எம்மிடத்தில் இல்லை. எனினும் அவர் வாழ்ந்து காட்டிய நெறியும், நெறிப்படுத்திய அன்பு வழி காட்டலும் எம்மை விட்டகலவில்லை.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை என்றும் வணங்குவதுன் மலர்த் தாளெழு தா மறையி னொன்று மரும் பொருளே யருளே யுமையே இமயத் தன்றும் பிறந்தவளே யழியா முத்தி யானந்தமே என்னும் அபிராமி பாடலின் அமைவிற்கு இசைவாக நாள்தோறும் அவர் ஓதும் இறை நாம உச்சரிப்பும் அவரின் சிவக் கோலமும் எல்லாரதும் நினைவில் நிற்பன. அத்தோடு மட்டுமல்லாமல் ஒரு கவிஞராகவும் அமைந்து அன்னை அலங்காரம் என்னும் அந்தாதி பாடி துர்க்காதேவி மேலான பக்தி நிலையையும் சான்று படுத்தியுள்ளார்.

அன்னை துர்க்கை அம்மன் திருவீதி உலா வரும் காலங்களில் ஐயா அவர்கள் அம்பாளின் அழகை ரசிப்பதோடு, இளைஞர்கள் அம்பாளை சுமந்து வரும் அழகையும் கண்டு களித்து உற்சாகப் படுத்துவார். எங்கள் இளைஞர்களின் வாழ்க்கை நிலை உயர வேண்டுமென, விரும்பிய ஐயா அவர்கள் வேண்டிய உதவிகளை நல்கினார். ஐயாவின் சிவவாழ்வை ஏற்றுக்கொண்டு அம்பாள் இன்று தனது திருவடி நிழலில் சேர்ப்பித்துள்ளார்.

"செயற்கரிய செய்வார் பெரியர்"

தெல்லிப்பழை இந்து இளைஞர்,
துர்க்காபுரம்.



முதறிஞர்
நம. சிவப்பிரகாசம்

## மூதறிஞர் நற்பணியை நாடு நன்கு அறியும்

"பண்புடையார்ப் பட்டுண்டுலகம் அதுஇன்றேல் மண்புக்கு மாய்வது மன்"

ஆம்! இந்த உலகம் பண்புள்ளவர்களிடத்திலே பற்றுள்ளமையால்தான் நிலை பெற்று இருக்கிறது. இல்லாவிட்டால் என்றோ மண்ணிலே புகுந்து அழிந்து போயிருக்கும்.

வள்ளுவரால் குறிப்பிட்ட இப்பண்பாளர்களில் எமது உள்ளத்தைத் தொடுபவராகவும் சைவாசார சீலராகவும், மனித நேயம் படைத்தவராகவும் இருமொழிப் புலமையும் இனிது பெற்றவராகவும் வெண்பாவில் இறை ஒளி என்ற நாமத்தை நிலை பெறச் செய்தவராகவும் விளங்கியவர் சிவப்பிரகாசம் ஐயா அவர்கள்.

20 - 03 - 1906இல் மல்லாகத்தில் நமசிவாயப் புலவருக்கு சற்புத்திரராக அவதரித்த இவர் 06 - 08 - 1995இல் இவ்வுலக வாழ்வை நீத்து இறையடி சேர்ந்தார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆன்மீகப் பணியில் ஈடுபட்டு சைவசமய உண்மைகளை உலகெங்கும் நிலை நாட்டப்பாடுபட்டார்.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் முப்பது ஆண்டுகள் நிர்வாக சபையின் உபதலைவராகப் பதவியிலிருந்து பயனுள்ள பணிகள் பலவற்றை நிறைவேற்றினார். 1991ஆம் ஆண்டு ஆவணி மாதம் முப்பதாம் திகதி எங்கள் ஆலய சேவையில் வெள்ளிவிழாக் கண்ட பெரியவராக இவர் பாராட்டப்பட்டு பொற்கிழியும் பொன்னாடையும் யாழ் / பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் அ. துரைராசா அவர்களால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

பெரியாரின் பல்துறைப்பணிகளை இந்த நாடும் ஏடும் நன்கு அறியும். எனவே இப்பெரியாரைப்பற்றி நாம் பெற்ற பயனுள்ள அனுபவங்களை உள்ளத்தில் இருத்தி அன்னார் பொன்னார் திருவடிகளை வணங்கி அமைகின்றேன்.

— தங்கம்மா அப்பாக்குட்டி

"மனிதனுக்கு உண்மையாக இருப்பவன் கடவுளுக்கும் உண்மையாக இருப்பான்"
- சுவாமி சிவானந்தர்

## நினைவுப் பிரார்த்தனை அழைப்பு

இடம்: கைதடி சைவச் சிறுவர் இல்லம்

காலம்: இன்று [ஞாயிற்றுக்கிழமை 24 - 09 - 1995]

நேரம்: முற்பகல் 10-00மணி

நினைவுக்கும் வணக்கத்துக்குமுரியவர்;
மூதறிஞர் நம. சிவப்பிரகாசம்
அவர்கள்
(உப தலைவர், முப்பது ஆண்டுகள்
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபை)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அந்தணப் பெருமக்கள், பணியாளர்கள், யாழ். இந்து சமயப் பேரவை, தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காதேவி பெண்கள் தொண்டர்சபை, துர்க்காபுரம் மகளிர் இல்லம், துர்க்காதேவி புராணபடன சபையினர், அமரர் ஐயாவின் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடனும், பணிவுடனும் அழைக்கின்றோம்.

நிர்வாகசபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
...95 (விளம்பர இல-38603)

## கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்ட நல்லார்

'கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்' என்ற திருமூலர் வாக்கிற்கமைய ஈர நெஞ்சினராய் இறைவனை இடைவிடாது வழிபாடாற்றி, நல்லறப் பணிகள் பலதிலும் முன்னின்று உழைத்து அமைதியாய் ஆண்டவன் திருவடி சென்றவர் அமரர் நம. சிவப்பிரகாசம் ஐயா அவர்கள். அன்னாரது இழப்பு ஈழ நாட்டுக்கோர் பேரிழப்பாகும்.

மூதறிஞராய், வழக்கறிஞராய், ஆங்கிலப் புலமையாளராய், நல்லவைகளின் உறுப்பினராய், பத்திரிகையாளராய், பேச்சாளராய், நல்லாளுமை கொண்ட மனிதராய் நடமாடிய ஆத்மா ஓய்ந்து விட்டது என் செய்வோம்!

பழுத்த பழமாய் இருந்து தள்ளாடும் வயதிலும் தமிழ்ப்பணி, சிவப்பணி ஆற்ற வேண்டுமென்ற சிந்தையோடு அயராது உழைத்தவர் இவர். நூற்றாண்டு விழாக் கண்ட யாழ். இந்துக் கல்லூரியின் மூத்த தலை மாணாக்கருள் ஒருவர். அருள்மிகு துர்க்கை அம்பாள் ஆலய அறப்பணித் தூண்களில் ஒன்று. இந்து சாதனம் பத்திரிகைக்கு இருதயம் என்னும் சாதனையோ இவர் பணிகள், பெருமைகள்.

கடல் கடந்த நாட்டிலும் சைவ சமயத் தொடர்புகளை கண்காணிக்க வேண்டுமென ஆவல் கொண்டவர். அத்தகைய நல்லார் ஒருவரை நாம் இழந்து விட்டோம்.

சிவப்பொலிவோடு, அஞ்சா உறுதியோடு தவப் பொழுதாய்ப் பிற்காலத்தை அனுபவித்த அவரது வாழ்வை, பணியைப் போற்றுவோம். அவரது வாழ்வைப் பொறுத்த வரையில்

'கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார்
தலைப்படுவர்
மற்று ஈண்டு வாரா நெறி'

என்ற வள்ளுவர் வாக்கிற்கமையப் பிறவிப் பயன் கண்ட ஆன்மாவாகப் பிறவா நிலைக்குத் தன்னை ஆக்கியவராய் நிறைந்து விட்டார்.

– ஆறு. திருமுருகன்.
"பாலாவி",
மருதனார்மடம், இணுவில்.

## மகளிர் இல்லத்தை வாழ்வித்த தெய்வம்

எமது துர்க்காபுரம் மகளிர் இல்லம் 1982ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று எண்ணிய எமது பெரியம்மாவின் எண்ணத்துக்கு ஊக்கமளித்தவர்களில் சிவப்பிரகாசம் ஐயாவும் ஒருவர். "தன்னை இந்த உயர்நிலையில் உயர்த்தி வைத்தவர் ஐயா தான்" என்று பெரியம்மாவே கூறுவார்.

மகளிர் இல்லத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு சிறுமியும் அந்த உயர் நிலையை எட்டிப்பிடிக்க வேண்டும், சைவசமய உலகத்துக்குப் பணிசெய்ய திலகவதியார், மங்கையர்க்கரசியார் போன்ற பல பெண்கள் கிடைக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார்.

எம்மைச் சந்திக்கும் போதெல்லாம் தாயினும் சாலப் பரிந்த கருணையுடன் எங்களை அருகில் அழைத்து எமது கல்வி முன்னேற்றம் பற்றி அக்கறையோடு விசாரித்து அறிந்து கொள்வார். எங்கள் இல்லத்தில் மிகவும் அக்கறை கொண்ட இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததும் இட்டு நிரப்ப முடியாததுமாகும். பெரியாரின் ஆத்மா அம்பாளின் திருவடியில் சேர்ந்து இன்புற்றிருக்கும் என்பதில் ஐயமுண்டோ!

த. தனனேஸ்வரி
சிரேஷ்ட மாணவி
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை.

## தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்ற பெரியார்

மல்லாகம் பெற்றெடுத்த மாமணிகளில் தலையாய பெருமைக்கு உரியவராக விளங்கியவர் அமரர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள். செந்தமிழிலும், ஆங்கிலத்திலும் துறைதோய்ந்த புலமையினால் எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் நிரம்பப் பெற்றவர். இதனாலே இந்து சாதனப் பத்திரிகை ஆசிரியராகத் தொடர்ந்து பல ஆண்டுகள் கடமையாற்றி வந்தவர்.

சைவ பரிபாலன சபையின் மூத்த உறுப்பினர் இவரே என்று அறிவதில் பெருமையடைகிறோம். வெண்பாப்பாடி மகிழ்வதிலும் வெளியிடுவதிலும் இவருக்கு அலாதியான பிரியம்.

'இறைஒளி' என்ற புனை பெயரில் இவருடைய கவிதை ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. தொண்ணூறு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து இறுதிக் காலத்தை சிவ வாழ்வாக்கி அமைதியாக இறைவனடி சேர்ந்து விட்டார். இப்பெரியாரின் நாமம் சைவ உள்ளங்களிலும் தமிழ் உள்ளங்களிலும் என்றும் நிலைத்து நிற்கும் புனித நாமம் என்பதைத் தெரிவித்து அன்னாருக்கு அஞ்சலி கூறி அமைகின்றேன்.

சி. நாகராசா B. A. சிறப்பு
திருநெல்வேலி, சட்டத்தரணி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

பட்டமளிப்பு விழாவுக்கு எம்மால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்து விட்டன. புகைப்படங்களை வந்து பெற்றுக் கொள்ளவும்.

சில்றன் போட்டோ
பல்கலைக்கழகச் சந்தி, பலாலி வீதி
திருநெல்வேலி, [38660]



## நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்

## A/L 95

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான
சனி, ஞாயிறு மீட்டல் வகுப்பு

ஆரம்பம்: 24-09-95 (ஞாயிறு)

பொருளியல் — 1—2 மணி
அளவையியல் — 2—3 மணி
வர்த்தகம் — 3—4 மணி
கணக்கியல் — 4—5 மணி

★ எமது வழமையான ஆசிரியர்குழுவால் போதிக்கப்படுகிறது.

(சி/2343)



உ

## இந்து சமயப் பேரவை யாழ்ப்பாணம்

"இந்து தர்மம்" – மலர் 10, 11
(மாதாந்த ஆத்மீக சஞ்சிகை)

## வெளியீட்டு விழா

இடம்: கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஆசிமட அரசடிப்-பிள்ளையார் கோயில்

காலம்: 24 – 09 – 1995 (ஞாயிறு) பிற்பகல் 6.30 மணி

தலைவர்: திரு. ஆ. மகாலிங்கம் (பதில் - தலைவர், இந்து சமயப் பேரவை)

★ நிகழ்ச்சி நிரல் ★

★ மங்கள விளக்கேற்றல்
வைத்திய கலாநிதி ச. குகதாசன் அவர்கள் (கண்சிகிச்சை நிபுணர்)

★ தேவாரம் து. சிவசுந்தரம்

★ திருவுருவப் படங்கள் திரைநீக்கம்
(அ) தவத்திரு கந்தையா சுவாமிகள் (குடைச் சுவாமிகள்)
திரு க. சிவ. சரவணமுத்து (தலைவர் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய பரிபாலன சபை)
(ஆ) அமரர் ஆத்மஜோதி நா. முத்தையா
திரு. த இ. பாலசுந்தரம் அவர்கள் (தலைவர், கோண்டாவில் கிழக்கு அருள்மிகு அரசடி விநாயகர் ஆலய பரிபாலன சபை)

★ வரவேற்புரை திரு. த. இ. பாலசுந்தரம் (இந்து சமயப் பேரவைச் செயற்குழு உறுப்பினர்)
சிவஸ்ரீ சு. சபாரத்தினக் குருக்கள் (பிரதம சிவாச்சாரிய ஆசிமடத்து அரசடி விநாயகர் ஆலயம்)

★ ஆசி உரை
நல்லை திருஞானசம்பந்த ஞானதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை, திருஞானசம்பந்த ஆதீன குருமகா சந்நிதானம்)

★ தலைமையுரை

★ வெளியீட்டுரை திரு. து. வைத்திலிங்கம் (பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)

★ முதற் பிரதி பெறுபவர்
வைத்திய கலாநிதி ச. குகதாசன் அவர்கள்

★ சிறப்புப் பிரதிகள் பெறுவோர்
கோண்டாவில் வாழ் இந்து சமய அபிமானிகள்

★ சிறப்புரை
திரு. ஆறு. திருமுருகன் (B. A.) (ஆசிரியர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

★ நன்றி உரை திரு. சி. சக்திகிரீவன் (செயலாளர், இந்து சமயப் பேரவை)

● அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ●

★ மலர் வெளியீட்டு உதவி
கோண்டாவில் வாழ் இந்து சமய அபிமானிகள்

ஆ. மகாலிங்கம், பதில் - தலைவர்.
சி. சக்திகிரீவன், செயலாளர்.
[38639]


# ரூ.2 லட்சம் பெறுமதியான முத்திரைகள் எடுத்துவர திணைக்களம் அனுமதி

யாழ்ப்பாணம், செப். 24

யாழ் மாவட்டத்துக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகளை வவுனியா தபாலகம் ஊடாக எடுத்து வருவதற்கு தபால் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நிலவும் முத்திரைத் தட்டுப்பாடு தொடர்பாக இங்கிருந்து அனுப்பப்பட்டு வந்த தொடர் விண்ணப்பங்களின் பேரில் ஒரு தடவையில் 2 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகளை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு தலைமை அலுவலகம் தீவிர பரிசீலனையின் பின் அனுமதித்துள்ளது.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் முதலாவது தொகுதி முத்திரைகள் விரைவில் வடமாகாண தபால் திணைக்கள உயரதிகாரி ஒருவரால் எடுத்துவரப்படுமென தபால் திணைக்களத்தின் தலைமை அலுவலக செய்திகளை ஆதாரம்காட்டி பதில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு க. மாணிக்கவாசகர் உதயனுக்குத் தெரிவித்தார்.

[இ-4]

## புலிகளின் குரல் வானொலியில்

ஞாயிறு இரவு
24 – 09 – 1995

★ 8-02 — தியாகி லெப். கேணல் திலீபனின் 8 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி— ந கிருஷ்ணாஎழுதிய— "அந்த நாள் நினைவு ஆறுமோ".
★ 8-20— திலீபன் நினைவாக பாடல்கள்.
★ 8-30 — செய்திகள்
★ 8-40— தொடர் நாடகம் பொன்— கணேசமூர்த்தி எழுதிய "இலங்கைமன்"— அங்கம்12 என்பன இடம் பெறும்.

25 – 09 – 1995
திங்கள் காலை
★ 7-02 —மாவீரவணக்கம்
★ 7-15— நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் அதனை— தொடர்ந்து
★ 8-00— மணிவரை நீங்கள் கேட்டவை— நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

ஞாயிறு மாலை
★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15— தியாக தீபம்
★ 5-30— சுதம்பம்.
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02— உங்கள் தெரிவு
★ 6-10 —செய்திகள்
★ 6-15— உங்கள் தெரிவு

## உண்ணாவிரதத்தில் இன்று பங்குபற்றுவோர் விவரம்

திலீபனின் 8ஆம் ஆண்டு நினைவையொட்டி, இன்று நடைபெறவுள்ள அடையாள உண்ணாவிரதங்கள்:

வலிகாமம்

★ நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றில் — ரேஸ்கி கொம்பனி சுந்தர்மடம், ஆர். வி. ஜி நல்லூர் செட்டித் தெரு, சந்திரா கச்சான் அலுவா கொம்பனி, பவானி கச்சான் அலுவா கொம்பனி, வணிகர் கழகம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அராலி சிற்றூர் மக்கள், அராலி இந்து மாணவர்கள்.

தீவகம்

★ நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றில் — வேலணை சேர். வை. து ம. ம. வித்தியாலயம்.

தென்மராட்சி

★ மணற்குணாய்ப்பிள்ளையார் கோயில் முன்றில் — தனங்கிளப்பு அ. த. க. பாடசாலை, மறவன்புலோ கோணேஸ் ச. ச. நிலையம், சீனன் நகர் குடியிருப்பு மக்கள், மீசாலை, கைதடி நுணாவில் மக்கள், சாவகச்சேரி, மீசாலை வணிகர் மன்றங்கள், கொடிகாமம் ப. நெ. வ. அ. கூ. சங்கம், ப. நோ. கூ சங்கம், பளை தம்பகாமம் சிற்றூர் மக்கள்.

வடமராட்சி

★ மூத்தவிநாயகர் கோயில் மைதானம் — இளங்கோ, சோலிங்கம், மகாவலி, ஜனசக்தி ச. ச நி உறுப்பினர்கள், பிரதேச மக்கள், விப்போ தனியார் கல்வி மன்றம், மாணவர் கல்வி மன்றம், கட்டை, நெல் ப. நோ. கூ. சங்க ஊழியர்கள்.

மாணவர் அமைப்பு

★ காலை 8-30 மணி முதல் — யாக்கரைக் கல்லூரி, கரணவாய் மகாவித்தியாலயம்.

கடற்புலிகள்

★ நாகர்கோவில் காலை 7 மணி முதல் — துளையடி மக்கள். (எ)

## குப்பைக்குள் கிடந்த இஸ்ரேல் குண்டு!

கொழும்பு, செப் 24

காலி வலவ்வத்த டிக்சன் வீதியில் குப்பைகளுக்கிடையே இஸ்ரேல் தயாரிப்பான சுமார் 400 இலக்கமுடைய கைக்குண்டு ஒன்றை காலி பொலிஸ் விசேட குற்றத் தடுப்புப் பிரிவினர் கண்டெடுத்தனர்.

இப் பகுதியில் கசிப்பு விற்கப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் அங்கு தேடுதல் நடத்தினர். அதன் போதே இக்குண்டு கண்டெடுக்கப்பட்டது.

(எ)

## ஐரிஷ் மோனாவை நோக்கி விமானங்கள் குண்டுவீச்சு!

குடாரப்பு கடற் பரப்பில் தரித்து நிற்கும் "ஐரிஷ் மோனா" கப்பலை நோக்கி கடந்த புதன்கிழமை காலையும், நண்பகலிலும் 'புக்காரா' "சுப்பசோனிக்" விமானங்கள் தாக்குதல் நடத்தின.

கப்பலை நோக்கி விமானங்கள் வீசிய குண்டுகள் இலக்குத் தவறி கடலுக்குள்ளேயே வீழ்ந்து வெடித்தன. இதனால் கடற்பகுதியில் புகை மண்டலம் எழுந்ததை அவதானிக்க முடிந்தது.

வானில் மிக உயரத்தில் பறந்தவாறே விமானங்கள் இத் தாக்குதலை நடத்தின.

(ஐ மி)

## விபத்தில் காயமுற்றவர் மரணம்

யாழ்ப்பாணம். செப். 24

கடந்த 21ஆம் திகதி காலை கிளிநொச்சி திருவையாற்றில் நடந்த வீதி விபத்து ஒன்றில் படுகாயமடைந்து யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த கிளிநொச்சியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பொன்னம்பலம் (45வயது) என்பவர் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

(எ-13)

### ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில்

## வதைகூடமாக இயங்கிய விகாரை கண்டுபிடிப்பு!

கொழும்பு, செப். 24

ஐ தே. க ஆட்சிக் காலத்தில் மர்மமான முறையில் கடத்திச் செல்லப்பட்ட இளைஞர்கள் பௌத்த விகாரை ஒன்றுக்குள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர் என்ற தகவல் தற்போது தெரிய வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வதை கூடமாகப் பயன்படுத்தப்பட்ட இந்த விகாரை தங்காலைக்கு அருகே அமைந்துள்ளது என்றும்—

சுமார் முந்நூறு வருடங்கள் பழமையானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ-6]


ஆண்டு – 5
புலமைப் பரிசில்

+

பாடசாலை அனுமதி பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் - விடைகளுடன் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும்.

அடுத்த வெளியீடு: 24 - 09 - 95 ஞாயிறு

BOND
யாழ்ப்பாணம்.
(8748)


## அவியாத பாண் விற்பனை; சாவகச்சேரியில் பறிமுதல்

தென்மராட்சி, செப். 24

இரு பக்கங்களும் நன்றாக அவியாத நிலையில் இருந்த பாண் பெருமளவில் விற்பனைக்கு இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டது. இச்சம்பவம் புதன்கிழமை காலை இடம்பெற்றது.

ஒரே தடவையில் பத்துப் பத்தாக வேக வைக்கப்படும் பாண் அடுக்குகள் அவியாத நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்திருந்தனர். அதனை அடுத்து சாவகச்சேரி நகர சுகாதாரப் பகுதியினர் நடத்திய பரிசோதனையின் போதே பாண் அவியாத நிலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதே வேளை கொடிகாமம் நகரப்பகுதிக் கடைகளிலும் அவியாத நிலையில் உள்ள பாண் விற்கப்படுவதாக மக்கள் குறைப்படுகின்றனர்.

(அ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் [illegible] நூலகம்.

உதயன்

293/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இரத்தக் காளி!

ஸ்ரீலங்கா அரசு, ஈழத் தமிழ் மண்ணில் மற்றொரு பல்லெண்ணிக்கை இனப்படு கொலையை [Mass Murder] செய்து முடித்திருக்கிறது!

கடந்த ஜூலை ஒன்பதாம் திகதி நவாலித் தேவாலயத்தின் மீது புக்காரா விமானம் நடத்திய கொடூரக் குண்டு வீச்சுத் தாக்குதலில் நூறுக்கும் மேற்பட்டோர் ஒரு சில விநாடிகளில் கொன்று குவிக்கப்பட்டனர்.

அதன் தொடர்ச்சியாக நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் மீது புக்காரா வெள்ளிக்கிழமை நடத்திய ஈனத்தனமான குண்டு வீச்சுத் தாக்குதலில் பள்ளி சென்ற பச்சிளம் மாணவர்களும் அவர்களை அழைத்து வருவதற்கு அவசர அவசரமாகச் சென்ற பெற்றோர்களும் கொடுங் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நாகர்கோவிலில் இருதரப்புப் போர் எதுவும் நடக்கவில்லை. அங்கு விமானப் படையினரைக் கோபமூட்டும் செயல் எதுவும் நடந்ததாகவும் கூறமுடியாது. இனப்படுகொலை செய்ய வேண்டும் என்ற திட்டமிட்ட நோக்கத்துடன் நடத்தப்பட்டதே இக்குண்டு வீச்சு.

தமிழ் மண்ணின் இளம் பயிர்களை, இளங் குருத்துக்களை கருக்கி அழித்து விடுவதன் மூலம் இந்த மண்ணின் மெய்யைச் சிதைத்து விடலாம் என்ற திட்டத்துடன் இந்தக் கொன்று குவிப்பு (Massacre) நடத்தப்பட்டிருக்கின்றது.

போர்ப் பிரதேசங்களில் ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள் தாக்கப்படக் கூடாது என்பது சர்வதேசப் போர் விதி. ஆனால் ஸ்ரீலங்கா படையினர் அவற்றை இலக்கு வைத்தே கடந்த ஐந்து வருடங்களாக எறிகணைகளாலும் குண்டுகளாலும் தமிழர்களை கொன்றொழித்து வருகிறார்கள்.

குடாநாட்டின் மீது பெரும் படை எடுப்பை நடத்தி இயன்றளவு பெரும் எண்ணிக்கையான தமிழர்களைக் கொன்று குவிப்பது சந்திரிகா அரசின் திட்டம். இந்த இனப்படுகொலை மனித உரிமை மீறல்களை உலகம் கண்டு கொள்ளாமல் மறைப்பதற்காகவே செய்தித் தணிக்கையை அரசு கொண்டு வந்துள்ளது.

நவாலித் தேவாலயப் படுகொலை உலகில் தனக்குக் கெட்ட பெயரை உண்டாக்கியதை பாடமாகக் கொண்டுதான் செய்தித் தணிக்கை என்ற இரும்புத்திரையைப் போட்டிருக்கிறது அரசு.

அது அமுலுக்கு வந்த பன்னிரண்டு மணி நேரத்திற்குள் அரசாங்கம்—விமானப் படை—நாகர் கோவிலில் நாசகாரத்தனம் புரிந்திருக்கிறது.

தமிழர் நலனில் அக்கறையுண்டு என்று போலி நாடகம் ஆடும் வகையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு யோசனை என்ற செல்லாக் காசைக் கடைவிரித்துள்ள சந்திரிகா—

இரும்புத் திரைக்குப் பின்னால் தமிழர்களை இரத்தப் பலி எடுக்க முனைந்துள்ளார்.

சமாதானத் தேவதையாக வேடம் போட்டுள்ள சந்திரிகா, தமிழர் இரத்தம் குடிக்கும் இரத்தக் காளியே என்பதனை இப்போது எவரும் புரிந்து கொள்வர்!

# வடமராட்சிப் பகுதி தொடர்ந்தும் வெறிச்சோடிய நிலையில் உள்ளது

## இடம் பெயர்ந்த பலர் வீதிகளில்

வடமராட்சி, செப் 24

வடமராட்சிப் பகுதி நேற்று இரண்டாவது நாளாக வெறிச்சோடிக் காணப்படுகிறது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் தென்மராட்சிப் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

மற்றொரு தொகுதி மக்கள் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலை [மந்திகை] வளவுகளிலும், கட்டட விறாந்தைகளிலும், வைத்தியசாலையைச் சுற்றியுள்ள வீதி ஓரங்கள் கடைத்தெருக்கள் பஸ்தரிப்பிடங்கள் போன்றவற்றிலும் வல்லிபுரக்கோவில் மந்திகை அம்மன் கோவில் துன்னாலை சாய மாதா கோவில் முறாவில் பிள்ளையார் கோவில் ஆகிய இடங்களிலும் உடுத்த உடையுடன் தங்கியுள்ளனர்.

இப் பகுதிகளிலுள்ள கடைகள் பூட்டப்பட்டதால் நேற்றையதினம் வெதுப்பகங்களில் பாண் தயாரிக்கப் படவில்லை.

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மட்டுமே பாண் தயாரித்து வழங்கியது.

இதனால் பாண் பெற்றுக் கொள்ள முடியாது பல குடும்பங்கள் பிள்ளை, குட்டிகளுடன் கஷ்டப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

இதேநேரம் இடம்பெயர்ந்து இவ்வாறு தங்கியுள்ளோரை பாடசாலைகளில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளில் பருத்தித்துறை பிரதேச செயலகம் ஈடுபட்டுள்ளது. [இ-173]

# செய்தி தணிக்கை குறித்து அரசுடன் விவாதிக்க எதிர்க்கட்சிகள் விருப்பம்

கொழும்பு, செப் 24

வடபகுதி யுத்த முனைச் செய்திகளை வெளியிடுவதற்கு கட்டுப்பாடு விதிக்கும் விதத்தில் அரசு அமுல் செய்துள்ள செய்தித் தணிக்கையை விவாதத்துக்கு உட்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் அரசுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இந்த தணிக்கைச் சட்டம் குறித்து தனது சந்தேகங்களை எழுப்பியுள்ளார் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

போர் குறித்த செய்திகளை உள்நாட்டுப் பத்திரிகைகள் வெளியிடுவது புலிகளுக்கு இராணுவத் தகவல் தரும் வகையில் அமையக்கூடும் என தணிக்கைக் குழுவின் உயரதிகாரி எட்மன் ஜெயசிங்கா அச்சம் தெரிவித்துள்ளார் என்றும் —

வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் செய்திகளை தணிக்கை செய்வது குறித்து அரசு மறுபரிசீலனை செய்யுமென அவர் அறிவித்திருப்பதாகவும் வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது.

ஆனால் இது குறித்து உறுதியான தகவல் எதனையும் இப்போது வெளியிட முடியாதென தகவல்துறை அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது (இ-4)

## விமான நிலையத்தின் பெயர் மாற்றம்

கட்டுநாயக்காவில் உள்ள கொழும்பு சர்வதேச விமான நிலையத்தின் பெயரை மீண்டும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் என அரசு பெயர் மாற்றம் செய்யவுள்ளது.

பண்டாரநாயக்காவின் சிரார்த்த தினமான நாளை மறுதினம் 26 ஆம் திகதி அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா விமான நிலையத்துக்குப் பெயர் மாற்றம் செய்து வைப்பார்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கம் பதவி வகித்த காலத்தில் இந்த விமான நிலையம் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் என அழைக்கப்பட்டு வந்தது.

பின்னர் 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.க அரசாங்கம் அதன் பெயரை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்தது [ஐ-ஐ]

## றோட்டரக்ற் கயிறு உற்பத்தி இயந்திரம்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணம் றோட்டரக்ற் கழகத்தால் மணியம் தோட்டம் பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நான்கு குடும்பங்களுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கயிறு உற்பத்தி இயந்திரம் வழங்கப்பட உள்ளது. (இ)

### தேசிய பாதுகாப்பு நிதி

## உரும்பராயில் இன்றும் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 24

சுன்னாகம், கந்தரோடை, ஏழாலை, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், ஈவினை, மல்லாகம், தெல்லிப்பளை பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பான கலந்துரையாடல் உரும்பிராய் அன்னை பூபதி கலை அரங்கில் இன்று ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை நடைபெற உள்ளது.

இதில் மேற்படி பிரிவுகளைச் சேர்ந்த மக்களை கலந்து கொள்ளுமாறு அரசியல் துறையினர் கேட்டுக்கொள்கின்றனர். [இ]

## கிளிநொச்சியில் விளைபூமி போர்க்கால கருத்தரங்கு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதியினர் இன்றும் நாளையும் [ஞாயிறு திங்கள்] விளை பூமி போர்க்கால வேளாண் உற்பத்தித் திட்டக் கருத்தரங்கினை கிளிநொச்சி பல்கலைக்கழக விவசாய பீடத்தில் நடத்த உள்ளனர்.

மேற்படி கருத்தரங்கில் வட தமிழீழத்தின் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் முன்னணி விவசாயிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (இ)

## அச்சுவேலி ம.வி. கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 24

இராணுவ நடவடிக்கை காரணமாக இயங்காதுள்ள அச்சுவேலி மகாவித்தியாலயத்தை பொருத்தமான இடத்தில் இயங்கச் செய்வது சம்பந்தமான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு ஆசிரியர்களை அதிபர் க.இராசதுரை அழைத்துள்ளார். (அ)

# காசுக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப். 24

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளோருக்கான ஒரு தொகை காசு தம்மிடம் உள்ளதாகவும் —

நாளை திங்கள் காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தந்து காசைப் பெற்றுக்கொள்ளுமாறும் — நிதித்துறை நடுவப்பணியகப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

★ வனிதமலர் குலவீரசிங்கம் — குமுதினி பிள்ளையார் கோவிலடி, அல்வாய் வடக்கு, அல்வாய்.

★ சரவணமுத்து — வீரவோடை, அல்வாய் வடக்கு, அல்வாய்.

★ என். கனகசபை [பாப்பா] / ஆ. கண்ணன் — 'கலை அகம்' [பழைய பீ ஸி. அலுவலகம் முன்பாக] அல்வாய் கிழக்கு, அல்வாய்.

★ திருமதி. அ. சிவக்கொழுந்து — லக்ஷ்மணன் தோட்டம், கற்கோவளம், பருத்தித்துறை.

★ வ. வீரகத்திப்பிள்ளை — பெரியவளவு, புலோலி மேற்கு, புலோலி.

★ த. சிவபாக்கியம் — மாவடி வளவு, புலோலி தெற்கு, புலோலி.

★ சுப்பிரமணியம் குணரட்ணாம்பிகை [ஜானகி] — பூதராயர் ஒழுங்கை, பருத்தித்துறை

★ அரியமலர் கிருஷ்ண பிள்ளை — நொத்தாரிஸ் தோட்டம், கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

★ சின்னத்துரை மகாலிங்கம் / மகாலிங்கம் சின்னத்துரை — கரணவாய் தெற்கு, கரவெட்டி.

★ புனிதவதி கந்தையா — கதிரவேலு துரைராஜசேகரம் மே/பா கொலின்கலட்டி, சட்டப்பச்சை, தெல்லிப்பளை.

★ திருமதி. சு. லறீனா — க. சாமி 1/5, பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

★ வீரபாகு சிதம்பரம் — 6 ஆம் பண்ணை, யாழ்ப்பாணம்.

★ கனகமணி ரஞ்சகுமார் — மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு, இணுவில்.

★ ஐ. சாந்தலிங்கம் — பிள்ளையார் ஒழுங்கை, இணுவில் [illegible] (இ)

### மட்டக்களப்பில்

## அதிரடிப்படையின் இரு முகாம்கள் மூடப்பட்டன

கொழும்பு, செப். 24

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடிக்கு மேற்கே அமைந்துள்ள அதிரடிப்படை முகாம்கள் இரண்டு கடந்த புதனன்று மூடப்பட்டன.

மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே படுவான்கரையில் உள்ள பழுகாமம், போரதீவு ஆகிய இடங்களில் அமைந்திருந்த அதிரடிப்படை முகாம்களே மூடப்பட்டன.

தற்போது இப் பகுதிகளில் இருந்து வெளியேறிய அதிரடிப்படையினர் வாவியின் மறுகரையில் உள்ள குறுமண்துறையில் புதிதாக முகாம் அமைத்துத் தங்கியுள்ளனர். (இ-எ)

## எங்கே சென்றாய் திலீபா?

எல்லையிலே எதிரியவன் வரும்போ தெல்லாம்
இயந்திரமாய் நீயங்கி வந்தாய்!
வல்லையிலே எதிரியுடன் வலிந்துசென்று
வயிற்றிலுள்ள குடலறுத்துக் கொண்டாய்!
கல்வியிலே 'இந்து'விலே முதல்வனாகிக்
கலங்கரையின் விளக்காகி நின்றாய்!
நல்லையிலே பன்னிருநாள் படுத்திருந்த
நாயகனே! நீயெங்கே சென்றாய்?

காந்தியின் தேசமது உன்னைக் கொல்லக்
காலனாய் மாறியதோ திலீபா?
சாந்தியுடன் சமத்துவஞ் சமதர்மத்தைச்
சாற்றுகின்ற புத்தரினைப் பெற்றநாடு
நீந்திவரும் பெருமுதலை ஆகியதோ?
நீதியினைக் காலடியிற் சிதைத்ததுவோ?
காந்தமென மக்களினைக் கவர்ந்தவெங்கள்
காவியத்து நாயகனே! எங்கே சென்றாய்?

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னம்மா முத்தையா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னம்மா முத்தையா 21-9-95இல் கொழும்பில் சிவபதமடைந்து விட்டார். அன்னாரது ஈமக் கிரியைகள் 22-9-95 இல் கொழும்பில் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr த. இராசையா
(சகோதரன்)
மு. சிவகுமாரி
மகள் (குயினி)

(38655)

## நடராசா குகதாஸ்

காரைநகர் - ஆயிலியைச் சேர்ந்த நடராசா குகதாஸ் செக்கோஸ்லேவியாவில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற நடராசா (சிறாப்பர்) சவுந்தரம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், முல்லைப் பிலவைச் சேர்ந்த காலஞ்சென்ற லட்சுமணர் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், கலைச்செல்வி, கலைவாணி, சுகன்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணி (ஆஸ்திரேலியா), டாக்டர் ஸ்ரீஸ்கந்தராசா (ஆஸ்திரேலியா), செந்தில்வேல் (கனடா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி

27, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(38663)

## வைத்திலிங்கம் இரத்தினப் பத்தர்

கொக்குவில் மேற்கு சொர்ண வடலியை பிறப்பிடமாகவும், 531, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பொன்னாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் இரத்தினப் பத்தர் நேற்றுக் காலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கமலாதேவி, பத்மாதேவி, சிவமூர்த்தி, சிவகுமார், சிவநேசன் (ஹொலன்ட்) சிவராசன், கௌரிமனோகரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செல்வநாயகம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி, ராஜேஸ்வரி, தியாகராசா ஆகியோரின் சகோதரரும், சிவசுப்பிரமணியம் காலஞ்சென்ற அச்சுதன் மற்றும் சரோஜாதேவி, பத்மராணி, நிர்மலா, ராஜினி ஆகியோரின் மாமனாரும், பிரகலாதன், சிறீகாந்தன், அருந்ததி, மாலினி, அகிலா, பகிரதன், கிரிதரன், கலைச்செல்வன் தசாயினி, மதீசன், மஞ்சுதன், மோகானந், பிரேமானந், ஜீவானந், சர்வானந், சுகன்யா, அனோஜன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சிவமூர்த்தி
(மகன்)

531, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(38662)

## திருமதி அன்னம்மா கந்தையா

சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற காசிப்பிள்ளை கந்தையாவின் மனைவி அன்னம்மா அவர்கள் நேற்று மாலை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் சரஸ்வதி, காசிப்பிள்ளை (ஒய்வுபெற்ற நில அளவையாளர்), காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் மகேஸ்வரி (இந்தியா), பரமேஸ்வரி (ஒய்வுபெற்ற ஆசிரியர் சென் ஆன்ஸ் றோ. க. த. பாடசாலை), கணேசநாதன் (கனடா), யோகநாதன் (இலங்கை வங்கி கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற குகதாசன் (உசன்) மற்றும் திருநாவுக்கரசு (மூளாய் தனியார் வைத்தியசாலை), ஆறுமுகம் (ஒய்வு பெற்ற ஆசிரியர் சுழிபுரம்), காலஞ்சென்ற Dr நாகவேல் (இந்தியா) மற்றும் தவமணி, குணரத்தினராசா (ஒய்வு பெற்ற இலிகிதர் கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம்), ரஞ்சிதம் (கனடா), பவளமணி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-09-95) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
க. காசிப்பிள்ளை
(மகன்)

மாவத்தை ஒழுங்கை,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(38664)

## உண்மையை மறைக்க...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டிருந்த 25 குழந்தைகள் உட்பட 40 பொதுமக்கள் அந்த இடத்திலேயே மிகவும் கொடூரமாக கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

அந்த சிறுவர்களின் உடல்கள் மரங்களிலும் பல்வேறு இடங்களிலும் தொங்கிக் கொண்டிருந்தது மிகவும் வேதனைக்குரிய கொடூரமான காட்சியாக இருப்பதை அங்கிருந்து வரும் செய்திகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

இது மாத்திரமல்ல இந்த பகுதியில் நேற்று முன்தினம் மட்டும் 68 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். முக்கியமாக புக்காரா விமானங்களின் குண்டு வீச்சுக்களினாலும் பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களினாலும் இந்த கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன.

குறிப்பாக சொல்லப் போனால் இப்பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 4 பேர் சிறுவர்களாக இருக்கிறார்கள். இன்னொரு இடத்தில் 6 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அத்தோடு ஒரு கத்தோலிக்க தேவாலயமும் சேதமடைந்திருக்கிறது.

இப்படியாக மிகவும் கொடூரமான பயங்கரத்தாக்குதல்களை அரசாங்கம் மக்கள் மீது நடத்தி உள்ளது.

ஆனந்தி: இந்தப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் ஏதாவது இருந்தனவா? அரசு உங்கள் முகாம்களைத் தாக்கியிருக்கலாம் அல்லவா?

திலகர்: அங்கு விடுதலைப் புலிகளின் முகாம்கள் எதுவும் இல்லை. அது பொது மக்கள் மிகவும் நிறைந்த இடமான கிராமங்களாக இருக்கின்றன. அப்பகுதிகளில் இப்போது பாடசாலைகள், தேவாலயங்கள் மீது நடைபெறுகின்ற குண்டு வீச்சுக்கள் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதை நாங்கள் பார்க்கிறோம்.

20ஆம் திகதியும் அச்சுவேலியில் உள்ள கன்னியாஸ்திரி மடமொன்று பலாலியிலிருந்து வீசப்பட்ட ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றது.

அப்பொழுது அங்கு அடைக்கலம் புகுந்திருந்த 3 பெண்கள் மிகவும் படுமோசமாக காயமடைந்துள்ளார்கள்.

இப்படி பொதுமக்கள் குடியிருப்புகள் மீது கண்மூடித்தனமாக குண்டுகள் வீசுகின்ற செயல்பாடு ஸ்ரீலங்கா அரசால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நவாலியில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் மிகவும் கொடூரமாக கொல்லப்பட்ட பின்பும் அதுவே ஒரு படிப்பினையாகவோ அல்லது சர்வதேச கண்டனத்திற்குரிய செயலாகவோ கருதாது ஒரு இனப்படுகொலை ரீதியில் ஸ்ரீலங்கா அரசாங்கம் சந்திரிகாவின் தலைமையில் இப்படியான படுகொலைகளை செய்து கொண்டு வருகிறது.

ஆனந்தி:- புலிகளுக்கும் அரசுக்கும் இடையே மீண்டும் போர் தொடங்கிவிட்டது என்ற சூழ்நிலையில் அரசியல் தீர்வுக்கான ஏதுநிலை ஏதாவது இருக்கிறதா?

திலகர்:- அரசாங்கத்தின் போக்கை பார்த்தால் அது ஒரு இராணுவத் தீர்வு காணுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதை நாங்கள் பார்க்கிறோம்.

யாழ் குடாநாட்டை எந்த விதத்திலேனும் எவ்வித மக் [illegible] லும் [illegible] வேண்டு [illegible] விடுதலைப் புலிகளை அழிக்கின்ற பல்வேறு நோக்கங்களுக்காக இராணுவத் தீர்வு காணுகின்ற முயற்சியில்தான் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதைக் காண்கின்றோம்.

பேச்சுவார்த்தை நடந்த காலத்திலும் ஒரு மறைமுகமான இராணுவத் திட்டத்துடன் அரசாங்கம் செயல்பட்டது. இப்பொழுது வெளிப்படையானதொரு இராணுவத் திட்டத்தோடு அரசாங்கம் செயற்படுவதை பார்க்கும் போது அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் தீர்வுத்திட்டங்களெல்லாம் ஒரு இராணுவ நடவடிக்கைக்கு உட்பட்ட சமாதான முயற்சிகளாக இருக்கின்றதே தவிர ஒரு நேர்மையான விடுதலைப்புலிகளை தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக மதித்து அவர்களை அங்கீகரித்து தமிழர்களுடைய அபிலாசைகளை, கோரிக்கைகளை அங்கீகரித்து நேர்மையான முறையில் நடைபெறுகின்ற முயற்சிகளாக இல்லை.

சிறீலங்கா அரசாங்கம் எப்பொழுது இந்த இராணுவ நோக்கத்தை கைவிடுகின்றதோ அப்பொழுதுதான் பேச்சுவார்த்தை சரிவருகின்ற ஒரு விடயமாக இருக்கும்.

[இ-4]

## வடமராட்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஷெல்கள் புலோலி மேற்கு, ஆத்தியடி, புலோலி கிழக்கு, வயிரவர் கோவில் வீதி, கிராமக்கோடு அறுபது பாகம் கிணற்றடி ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. இதனால் வீடுகள் சில சேதமடைந்தன. மூவர் காயமடைந்தனர்.

பிற்பகல் 2 மணியளவில் படையினர் ஏவிய ஷெல்கள் வல்வெட்டித்துறை ஊறிக்காடு பகுதியில் விழுந்து வெடித்தன. அதனால் அவ்விடத்தை சேர்ந்த ஐயாத்துரை ஏகாம்பரம் (வயது75) என்ற வயோதிபரும் —

வியாபாரி மூலை பகுதியில் விழுந்த ஷெல்லினால் அவ்விடத்தைச் சேர்ந்த செ. சவுந்தரம் (வயது 60) என்பவரும் உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்தனர்.

சுற்றோவளம் புனித நகர், வல்லிபுரக் கோவில் சுற்றாடல் பகுதிகளிலும் ஷெல்கள் பல விழுந்து வெடித்துள்ளன.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் உடுப்பிட்டி இமையாணன் பகுதிகளை நோக்கியும் தாக்குதல் நடத்தப்பட்டது.

வடமராட்சி பகுதியில் நேற்று விமானத் தாக்குதல்கள் இடம்பெறவில்லை.

## பலாலிக்கான..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் தாக்கி மூழ்கடித்தன் பின்னர் —

பலாலியில் உள்ள ஆயிரக் கணக்கான இராணுவத்தினருக்குத் தேவையான உணவு மற்றும் பொருள்களையும் —

ஆயுதங்கள் மற்றும் தளபாடங்களையும் — ஏற்றி வரும் விநியோகக் கப்பல்களுக்கு 'டோறா' படகுகளே பாதுகாப்பு(Escort) அளித்து வந்தன.

அவற்றில் நான்கை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்து விட்டனர். அதனால் விநியோகக் கப்பல்களைப் பாதுகாப்பாகக் காங்கேசன்துறைக்குக் கொண்டு வந்து சேர்ப்பது கடற்படைக்கு ஆபத்தான செயலாக மாறியுள்ளது.

இதனால் பலாலி இராணுவ முகாமில் உள்ள ஆயிரக்கணக்கான துருப்புகளுக்கு சாப்பாடும், ஆயுதமும் வழங்குவது கடினமான காரியமாக மாறி உள்ளதாம்.

இதேவேளை காங்கேசன்துறை வரும் விநியோகக் கப்பல்களை கடற்புலிகள் மீண்டும் தாக்கக்கூடும் என்ற அச்சமும் கடற்படையில் பரவி வருகிறது. அதனால் புலிகளின் தாக்குதல் குறித்து எப்போதும் கடற்படையினர் விழிப்பாக இருப்பதாக 'த ஐலண்ட்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அச்சத்தினால் இப்போது காங்கேசன்துறையில் இரவு நேரத்தில் கப்பல்கள் தங்கித்து நிற்பதில்லை.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கடற்படையினரின் கடற்கலங்களின் அணி காலையில் வடமராட்சி கிழக்கில் இருந்து காங்கேசன் நோக்கிச் சென்றதையும்—

அவை மாலையில் வெற்றிலைக்கேணி நோக்கித் திரும்பி விட்டதாகவும்—

கடற்கலங்கள் கரையில் இருந்து மிகவும் தூரத்தே செல்வதைக் கண்டதாகவும்—எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர். [ஐ-173-ஙி]

## நேற்றைய ஷெல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ கிருஷ்ணசாமி வதனி [வயது 18] இமையாணன் காயமடைந்தவர்கள் பருத்தித்துறை மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை நேற்று முன்தினம் பருத்தித்துறைப் பகுதியை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் வீச்சில் இருவர் காயமடைந்தனர்.

இவர்களில் செட்டியார் வீதியைச் சேர்ந்த ஆதிமூலம் ஜெயராணி (வயது 53) யாழ் ஆஸ்பத்திரியிலும்—

தும்பளையைச் சேர்ந்த திருமதி றிச்மன் (வயது 36) மந்திகை ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டனர்.

(ஐ-173-15-13)

# மரண அறிவித்தல்

## திருமதி வள்ளியம்மா முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்

கைதடி - வடக்கு கயிற்றசிட்டி கந்தசுவாமி கோவில் முன்னைநாள் பூசகர் காலஞ்சென்ற முத்துக்குமாரசுவாமிக்குருக்களின் அன்புத் துணைவியார் திருமதி வள்ளியம்மா நேற்று இரவு சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் சுப்பிரமணியஐயர், கணேசக்குருக்கள் (கைதடி), ஜெகன்நாதக்குருக்கள் (கொழும்புத்துறை), ஐயாத்துரைக்குருக்கள் (உரும்பிராய்), சோமசுந்தரக் குருக்கள் (உரும்பிராய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-9-95) பிற்பகல் 2 மணிக்கு கைதடி வடக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, தச்சன்பிட்டி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணேசக்குருக்கள்
(மகன்)

[38665]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் தாவடி வீதி, 1/ இல் உள்ள அச்சகத்தில் 24 09 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org